(ii) பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இன்கீழ் எந்தவோர் அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகத்திலும் மாத்திரம் பரீட்சைக் கட்டணமாக 750.00 ரூபா தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசு செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர் தன் வசம் வைத்திருப்பது மிகவும் உசிதமானது. எக்காரணங்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சைக் கட்டணத்திற்குப் பகரமாக அஞ்சல் முத்திரைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

8. (i) இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள்/ பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற கருதுகோளின் அடிப்படையில் குறித்த தினத்தன்று அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தை முன்வைத்த விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எழுத்துமூல பரீட்சையொன்றுக்குத் தோற்றுமாறு அழைக்கப்படுவர். இவ்வாறு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஒருவர் அப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லா தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்பட மாட்டா.

(ii) பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தபட்சம் ஐந்து நாட்களுக்கு முன்னராவது தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதபரீட்சார்த்தி ஒருவர் இருப்பாராயின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது குறித்து இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளையுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு தொடர்பை ஏற்படுத்தும்போது விண்ணப்பகாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பகாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை திருத்தமாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பகாரர் கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் ஒருவராயின், அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாக பெற்றுக்கொள்ளக்கூடியவாறு விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதமொன்றை 011-2784232 என்ற தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைப்பதன்மூலம் விசாரிப்பதே மிகவும் பயனுள்ள வழிமுறையாக அமையும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் யாதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்கு தன் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவத்தை அஞ்சலிடும்போது பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றை தயார்நிலையில் வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

(iii) இவ்வறிவித்தலின் பந்தி 01 இன்பிரகாரம் பரீட்சைக்குத் தோற்றி ஒவ்வொரு பாடத்திற்கும் 40% க்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் குறித்து அறிவிக்கப்படும் அல்லது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.results. exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

(iv) பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில், குறித்த ஒரு சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பரீட்சையின் முதலாம் நாள் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை பரீட்சை நிலைய அதிபரிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை ஒப்படைக்காத பரீட்சார்த்தி எவரும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

9. **ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலைய அதிபர் திருப்திப்படக்கூடிய விதத்தில் தமது ஆளடையாளத்தை பரீட்சார்த்திகள் நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேசிய ஆளடையாள அட்டை.

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்கமுடியாத விண்ணப்பகாரர்களுக்கு பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பளிக்கப்பட மாட்டா.

10. விண்ணப்பகாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.- அதிகாரம்பெற்ற ஒருவரினால் விண்ணப்பகாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, அரசினர் பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான் ஒருவர், சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவர், பிரசித்த நொத்தாரிசு ஒருவர், முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர், பொலிஸ் சேவையில் செய்திநிரற்படுத்திய பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர், ஆண்டிற்குரிய வேதனம் ரூ.240,360.00 அல்லது அதற்கு கூடுதலாக வேதனத்தைப் பெறும் அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அரசாங்கத்தின்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஒருவர் எனில், தாபனத் தலைவரினாலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

11. இதனகத்து குறிப்பிடப்படாத யாதேனும் ஒரு விடயம் இருப்பின், அது சம்பந்தமாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தினால் முடிவெடுக்கப்படும். சகல விண்ணப்பகாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களின்படி செயலாற்றக் கட்டுப்பட்டவர்களாவர்.

12. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அச்சட்டதிட்டங்கள் மீறப்படுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் ஆளாகலாம்.

13. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலிலுள்ள வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது இசைவின்மை இருப்பதாகத் தோன்றுமாயின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூலமான அறிவித்தலின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்.

சிறைச்சாலைத் தலைமையகம்,
2016.07.26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலகப் பாவனைக்கு)

**சிறைச்சாலைகள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு 3 சேவை வகுதியின் தரம் III உபவேலை பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்புசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

(Open Competitive Examination for Recruitment to the Post of Sub Work Inspector Grade 111 of Management Assistant Technical Segment in the Department of Prisons - 2016.)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(குறித்த இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம்: HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 பெயரின் இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை பின்னரும் இட்டு வரும் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H.M.S.K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 நிரந்தர வசிப்பிட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. தேசிய ஆளடையாள அட்டை பற்றிய விபரங்கள் :

3.1 ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி :----.

4. பால்நிலை :
ஆண் - 0
பெண் - 1
☐
(உரிய இலக்கத்தை கூண்டினுள் எழுதவும்.)

5. தாங்கள் எவ்வழியில் இலங்கைப் பிரசையாவீர்கள் ?
பரம்பரை மூலம் - 1
பதிவின் மூலம் - 2
☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

6. தேசிய இனப்பிரிவு :
சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
பறங்கியர் (பர்கர்) - 5
ஏனையோர் - 6
☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

7. தொலைபேசி இலக்கம் :----.

8. (அ) பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. தாங்கள் எப்பொழுதாவது நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் / இல்லை
விடை 'ஆம்' எனில், அது குறித்து விபரிக்கவும் :----.

*10.* கல்வித் தகைமைகள்:

| *கல்விகற்ற பாடசாலை/பிரிவெணா* | *க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் சுட்டிலக்கமும்* | *பாடங்கள்* | *பெற்றுக்கொண்ட சித்திகள்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

*11.* தொழில் தகைமைகள் :

| *தேசிய தொழில் திறன் மட்டம்* | *அப்பரீட்சைக்குத் தோற்றிய வருடமும் சுட்டிலக்கமும்* | *தேசிய தொழில் திறன்களைப் பெற்றுக்கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

*12.* பரீட்சைக் கட்டணம்:

(i) செலுத்திய தபாலகம் :----.

(ii) செலுத்திய தொகை :----.

(iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

பற்றுச்சீட்டை அதன் ஓர் ஓரத்தினால் இங்கு ஒட்டிவிடவும்.
*(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளது.)*

*13.* விண்ணப்பதாரரின் உறுதியுரை:

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன். உண்மைக்குப் புறம்பானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் தெரியவரின், நான் தகுதியற்றவன் ஆவேன் என்பதையும், நியமனத்தின் பின்னர் தெரியவரின், இழப்பீடு எதுவும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவதற்கு உள்ளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் ஆகியன தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

*14.* விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் : *(ஏற்புடைத்தானதல்லாத இடங்களில் கீறிவிடவும்.)*

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................ ................................................ என்பவரை தனிப்பிட்ட முறையில் நான் அறிவேன் என்பதையும், அவர் ............ மாதம் ......... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதையும், அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்பதையும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம் :----.
அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
அத்தாட்சிப்படுத்துபவரின் பதவி :----.
அத்தாட்சிப்படுத்துபவரின் முகவரி :----.
திகதி :----.
*(பதவி இலச்சினை)*

15. தாபனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் : *(அரசாங்க/ மாகாண அரசாங்க/ அரச கூட்டுத்தாபன சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)*
இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ………………………………………..… ……………………………….. இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் ……………………………… …………………….. ஆக பணியாற்றுவதுடன், அவரது விண்ணப்பப்படிவத்தை சிபார்சுசெய்து சமர்ப்பிக்கின்றேன். இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து அவரை விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

----,
தாபனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்.)

*8-225*

---

## கல்வி அமைச்சு

### 2017 ஆம் ஆண்டுக்காக பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுத்தல்

2017 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒரு வருட கால பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் நடைபெறும்.

3. அவ்வப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடநெறிக்காக ஒரு மொழிமூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(1) கொழும்பு பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம்
(2) பேராதனைப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மூலம்
(3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - தமிழ் மொழி மூலம்

4. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர் என்பதனை உறுதி செய்ய வேண்டும் :-

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரசையாக இருத்தல்.

(ii) 2016.09.02 ஆம் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல்.

(iii) சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியமும் சிறந்த நடத்தையும் கொண்டவராக இருத்தல்.

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால்/ உயர் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பிறிதும் நிறுவனத்தின் பட்டதாரியாகவோ அல்லது அதற்கு சமனான மட்டத்தில் கவனத்திலெடுக்கப்படும் வேறு தகைமையைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) கீழ்க்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருத்தல் :-

(அ) * இலங்கை பிரிவென் ஆசிரியர் சேவை :
* இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை :
* இலங்கை ஆசிரியர் சேவை :
(ஆ) இலங்கை அதிபர் சேவை :
(இ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை :
(ஈ) இலங்கை கல்வி நிர்வாக சேவை :

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2016.09.02 ஆம் திகதியன்று இலக்கம் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் பட்டதாரியாக ஒரு வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

***கவனிக்க வேண்டியவை :***

(1) கற்பித்தலில் தேசிய டிப்ளோமா நியமனம் பெற்ற ஆசிரியர்கள் 2016.09.02 ஆம் திகதியன்று நியமனத்திற்குரிய ஒப்பந்த முறியின்படி தமது கட்டாய சேவைக்காலமான ஐந்து வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

(2) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2016.09.02 ஆந் திகதியன்று பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்து அல்லது அவ்வாறின்றேல் அதில் ஐந்து வருடங்கள் (05) பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர்.

(3) கல்விமாணி பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

5.1 ***தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :***

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையின் மூன்று மடங்கினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) வர்த்தமானி அறிவித்தலில் இலக்கம் 4(v) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரி தனக்குரிய சேவை/ சேவைகளுக்கான பதவி/ பதவிகளின் சேவைக்காலத்திற்காக நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 04 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக்காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகள் 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் 4(v) இல் காட்டப்பட்டுள்ள சேவைகளிலொன்றில் முதல் நியமனம் பெற்று சேவைக்குரிய பதவியில் முதல் கடமையைப் பொறுப்பேற்ற தினம் தொடக்கம் ஆகும்.

கவனத்திற்கு.- 4(v) இல் குறிப்பிடப்பட்ட சேவையில்/சேவைகளின் பதவியில்/பதவிகளில் தொடர் தேர்ச்சியாக சேவைக்காலம் இருக்க வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக் காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாக கருதி அப்புள்ளிகளின் தொடருக்கமைய பாடநெறிக்காக தெரிதல் நடைபெறும்.

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கையில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும்.

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

5.2 ***எழுத்துமூலப் பரீட்சை :***

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடைபெறும்.

(ii) மேற்கூறப்பட்ட 02 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழி மூலம் எழுத்து மூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்பட வேண்டும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது :-

(அ) பொது அறிவு.- சமகாலத் தகவல்கள், பொது அறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்)

(ஆ) பொது உளச்சார்பு.- மொழி ஆற்றல், விளக்கம், தர்க்க மற்றும் புள்ளிவிபர ரீதியிலான திறன் தொடர்பான வினாப்பத்திரம். (நேரம் : 01 மணி 30 நிமிடம்)

5.3 ***நேர்முகப் பரீட்சை :***

(i) நேர்முகப் பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடரத் தகைமை பெற்றவர் என உறுதி செய்ய வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4(V) இற்குரிய பதவியின்/ பதவிகளின் சேவைக்காலத்தை உறுதி செய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக முதல் நியமனத்திற்குரியதான கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப் பரீட்சையின்போது உறுதிசெய்யப்பட வேண்டும் இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட பிரிவெனாக்கள் மற்றும் அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகளிலிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் :-

(அ) பாடநெறிக்காக விடுவிக்கப்படுவதாகவும்,

(ஆ) பாடநெறியை தொடரும் காலப்பகுதிக்குள் சம்பளம் கொடுக்கப்படுவதாகவும்,

(இ) பாடநெறியை பூர்த்தி செய்த ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும்,

(ஈ) குறித்த ஆசிரியரின் கற்கைக் கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொள்வதில்லை என்றும்,

(உ) ஆசிரியரின் பணிக்கூறுகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதாக நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி/ நிர்வாக சேவை முகாமையாளரினால் உறுதிசெய்யப்பட்ட பிரகடன படிவத்தை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை :**

(i) வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவத்தை தயாரிக்க வேண்டும்.

(ii) கட்புலன்/ செவிப்புலனற்ற/ ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.- பரீட்சைக் கட்டணமாக ரூபா 750.00 பணத்தை அருகாமையில் உள்ள தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

2016.08.05 ஆந் திகதி தொடக்கம் 2016.09.02 ஆந் திகதி வரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(iv) விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :

(அ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரம் - 2017" பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 2016.09.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு " பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டுச் சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(இ) சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்று நிறுவனத் தலைவரால் விண்ணப்பதாரியின் சுயவிபரக்கோவைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படின் கடமை விடுமுறை பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்கு இவ்விண்ணப்பப்படிவம் பயன்மிக்கதாக அமையும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதிப்பத்திரம் பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுவதுடன் தமது அனுமதிப்பத்திரம் பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்காத பட்சத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரல்லை" என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்ட தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :

(அ) பரீட்சையின் பெயர் :----.
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் :----.
(இ) முகவரி :----.
(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இலக்கம் : ----.
(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி :----.
(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் :----.

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) உரிய பாடநெறியைத் தொடருவதற்கு விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

7. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பாடசாலைகள், தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் ஆகியவற்றில் சேவையாற்றும் அதிபர் தரத்திலுள்ளவர்கள், ஆசிரியர்களின் கற்கை விடுமுறைகள் கல்வியமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறைகள் மாகாணக் கல்விச் செயலாளர்களினாலும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

8. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின்னர் அவர் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்குவிதி முறைகளுக்கமைய குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் சேவையாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் / கல்விச் செயலாளருடன் பிணை முறியில் ஒப்பமிட வேண்டும்.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய கால எல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், நடத்தை, வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படின் சிங்கள மொழி வாசகங்களே மேலோங்கும்.

டபிள்யு.எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய"
பத்தரமுல்லை,
2016, ஓகத்து 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**2017 ஆம் ஆண்டுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேரப் பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பித்தல்**

| |
|---|
| |

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

| விண்ணப்பிக்கும் மொழி மூலம் (சிங்களம்/ தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு/ யாழ்ப்பாணம்) | விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு/ யாழ்ப்பாணம்/ பேராதனை) |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர்- ஆங்கில பெரிய எழுத்துக்களில் - (முதல் எழுத்துக்கள் பின்னால்) :----.
உம் : Mr. SILVA, A. B. C

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ஆ) அலுவலக தொலைபேசி இலக்கம் :----.

(ii) (அ) சொந்த முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ஆ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை/ நிறுவனத்தின் அமைவிடம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/ தனியார் பாடசாலை/ பிரிவெனா/ ஏனையவை) :----.

3. (i) பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(ii) 2016.09.02 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(iii) பால் : (ஆண்/ பெண்) :----.

4. பட்டம் தொடர்பான விபரம் :

| பட்டம் | பல்கலைக்கழக பாடநெறியைப் பயின்ற காலம் (....... தொடக்கம்) ....... வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லு படியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம்/ பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி/ வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

5. (i) (அ) இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவைக்கு/ இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவைக்கு/ இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இந்த சேவையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(இ) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) (அ) இலங்கை அதிபர் சேவை/ இலங்கை கல்வியியலாளர் சேவை/ இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை அதிபர் சேவை/ இலங்கை கல்வியியலாளர் சேவை/ இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கடமையைப் பொறுப்பேற்ற திகதி :----.

(iii) பட்டத்திற்குப் பின்னர் 2016.09.02 ஆந் திகதியில் 4(v) இல் குறிப்பிடப்பட்ட உரிய சேவை/ சேவைகளின் சேவைக்காலம் :----.

(iv) 2016.09.02 ஆந் திகதியில் 4(v) இல் காட்டப்பட்டுள்ள சேவை/சேவைகளில் முழுமையான சேவைக்காலம் :----.

6. தொழிற்பயற்சி தொடர்பான விபரம் :

| பாடநெறியைத் தொடர்ந்த நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/ தேசிய கல்வியியற் கல்லூரி/ ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாடநெறியைப் பயின்ற கால எல்லை | |
|---|---|---|---|
| | | திகதி தொடக்கம் | திகதி வரை |
| | | | |

7. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விபரங்கள் :

| கல்வி விடுமுறையின் இயல்பு (சம்பளத்துடன் கூடிய/ சம்பள மற்ற, தேசிய/ வெளிநாடு) | கல்வி விடுமுறை பெற்றுக் கொண்டதற்கான காரணம் | எவ்வளவு காலப்பகுதிக்கானது | பிணைமுறிக் காலம் (........... ஆந் திகதி தொடக்கம் ....... ஆந் திகதி வரை) | பிணைமுறிக் காலப் பகுதி பூர்த்திசெய்யப் பட்டுள்ளதா/ இல்லையா என்பது தொடர்பாக பூர்த்தி செய்யப்படாததாயின் அதற்காக இன்னும் இருக்கும் காலப் பகுதியைக் குறிப்பிடுக) |
|---|---|---|---|---|
| | | | | |

**கவனத்திற்கொள்க.**- இதற்கு முதல் பெற்றுக்கொண்டுள்ள கல்வி விடுமுறைகளுக்குரிய மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணையை பிழையில்லாமல் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

***குறிப்பு***.- *தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைப் பயிலும் கால எல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்பட மாட்டாது.*

8. (அ) விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா ? ஆம்/ இல்லை
(ஆ) அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள் :

| 9. | தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். | .............. ஆந் திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் ......... .............. இன்கீழ் ........................ தபால்/உப தபால் அலுவலகத்திற்கு ரூ. ............................ (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதிசெய்கின்றேன். |
|---|---|---|

விண்ணப்பதாரரின் கையொப்பம் :----.
திகதி :----.

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை** :

விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானவையும் உண்மையானவையும் என்றும் 2016.08.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்கான தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிசெய்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **பாடநெறிக்காக நிறுவனத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை** :

(அதிபர், பீடாதிபதி, நிறைவேற்று அதிகாரி, நிர்வாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் கட்டாயமானதாகும்.)

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியைத் தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இந்த விண்ணப்பதாரியை சேவையிலிருந்து விடுவிக்கிறேன்/ விடுவிக்கவில்லை.

----,
அதிபரின்/ நிறுவனத் தலைவரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

12. **பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசு** :

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதற்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

----,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

8-192

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.*** *– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

**அட்டவணை - 2016**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2016 |
| | | வெள்ளி | 12.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2016 |
| | | வெள்ளி | 19.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2016 |
| | | வெள்ளி | 26.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2016 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2016 |
| | | வெள்ளி | 09.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2016 |
| | | வியாழன் | 15.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2016 |
| | | வெள்ளி | 23.09.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2016 |
| | | வெள்ளி | 30.09.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.09.2016 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 07.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.09.2016 |
| | | வெள்ளி | 14.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.09.2016 |
| | | வெள்ளி | 21.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.10.2016 |
| | | வெள்ளி | 28.10.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.10.2016 |

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*